

## கூட்டரசுப் பிரதேச தினத்தை முன்னிட்டு

# 11 நிகழ்ச்சிகள்

கோலாலம்பூர், பிப். 1-

இன்று கொண்டாடப்படும் கூட்டரசுப் பிரதேச தினத்தை முன்னிட்டு கோலாலம்பூர் மாநகர் மன்றம் 11 நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இவ்வாண்டு ஜூலை 14ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படுவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் வரை சுவாரா-1 நிகழ்ச்சியும் பிப்ரவரி 23ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை தியெட்டரிக்கல் கெமுரு நிகழ்ச்சியும் பிப்ரவரி 24ஆம் தேதி சீனப் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியும் பிப்ரவரி 25ஆம் தேதி சைக்கிளோட்டப் போட்டியும் ஜூலை 13, 14ஆம் தேதிகளில் பல்வேறு விழா நிகழ்ச்சிகளும் நடைபெறும் எனவும் அந்த அறிக்கை கூறியது.

இவ்வாண்டு கொண்டாடப்படும் கூட்டரசுப் பிரதேச தினத்தை முன்னிட்டு தலைநகரில் உள்ள ஜாலான் ராஜா லாவுட், ஜாலான் ராஜா, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், ஜாலான் சுல்தான் இஸ்மாயில் ஆகிய சாலைகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டரசுப் பிரதேச பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறியது.

அதேவேளையில், தலைநகரைச் சுற்றி 1,050 கூட்டரசுப் பிரதேசக் கொடிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் அது கூறியது. அதேவேளையில் இவ்வாண்டு கூட்டரசுப் பிரதேச தினத்தைக் கொண்டாடும் வகையில் தலைநகரில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் வர்த்தக மையங்களும் கூட்டரசுப் பிரதேச தினக் கொடிகளை ஏற்றுமாறு கடிதங்கள் விநியோகம் செய்யப்பட்டதாகவும் அது கூறியது.